1975 மார்ச் 5]

சட்டப் படிப்புக்கு மாணவர்கள் அனுமதி

*83.வினா—திரு எம் முத்தையா : மாண்புமிகு கல்வி-சுற்றுலாத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1973-74 ஆம் கல்வி ஆண்டில், எம்.எல். வகுப்புகளுக்கு சட்டக் கல்லூரியிலும், சென்னைப் பல்கலைக் கழகத்திலும் தேர்ந்தெடுக்கப்பட்ட தாழ்த்தப்பட்ட மாணவர்கள் எத்தனை நபர்கள்?

(இ) மொத்தம் மனுச் செய்த தாழ்த்தப்பட்ட நபர்கள் எத்தனை பேர்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) 3 பேர்கள்.

(இ) 3 பேர்கள்.

திரு. எம். முத்தையா : தலைவரவர்களே, இந்தச் சட்டக் கல்லூரியில் பெண்கள் யாரும் தேர்வுக்கு வந்துள்ளார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தனிக் கேள்வி வேண்டும்.

திரு. தொ. ப. சீனிவாசன் : தலைவரவர்களே, தாழ்த்தப்பட்ட மக்களுக்குச் சட்டக் கல்லூரியில் இடம் அளித்ததைப் போல் மிகவும் பின்தங்கிய சலவைத் தொழிலாளர்கள், மருத்துவ இனத்தைச் சேர்ந்தவர்கள், மீனவர்கள் போன்றவர்களுக்கும் வாய்ப்பளிக்கப்பட்டிருக்கிறதா? அவர்கள் மனுச் செய்திருக்கிறார்களா? எத்தனை பேர்களுக்கு வாய்ப்பளிக்கப்பட்டிருக்கிறது என்ற விவரத்தை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, கல்வி நிறுவனங்களில், குறிப்பாக இப்படிப்பட்ட தொழிற்கல்வி நிறுவனங்களில் நாம் தாழ்த்தப்பட்டவர்களுக்கு என்று 18 சதவிகிதமும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு 31 சதவிகிதமும் ஒதுக்க வேண்டுமென்ற அடிப்படையில்தான் மாணவர்களைச் சேர்க்கின்றோம். அந்த அடிப்படையில்தான் அவர்களுக்கென்று ஒதுக்கப்பட்ட கோட்டாக்கள் நிரப்பப்படுகின்றன. எம்.எல். படிப்பிற்கு மொத்தம் 182 மாணவர்கள் எடுக்கப்பட்டார்கள். 3 பேர்கள்தான் தாழ்த்தப்பட்டவர்கள் விண்ணப்பித்தார்கள், அவர்கள் எடுத்துக்கொள்ளப்பட்டார்கள். தனிக் கேள்வி போட்டால், பிற்படுத்தப்பட்டவர்கள் எவ்வளவு பேர் விண்ணப்பித்தார்கள், எவ்வளவு பேர் எடுத்துக்கொள்ளப்பட்டார்கள் என்ற விவரம் தரலாம்.